**றுஹுணு பல்கலைக்கழகம் - 2019**

-----------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---------------------------------------------------------

றுஹுணு பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

-------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக் கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும்

பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக் கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை

அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக் கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.5 <u>நிதிக்கூற்றுக்கள்</u>

### 1.5.1 <u>நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு</u>

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு "முறையாக திட்டமிடப்பட்ட" உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

| | குறிப்பிட்ட நியமங்களுடன் தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இல் 99 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனம் ஒன்றின் பற்றாக் குறை அல்லது மிகையினை இணங்காணும் போது அனைத்து வருமானங்கள் மற்றும் செலவுகளை நிதிச் செயலாற்றல் கூற்றில் உட்படுத்தப்பட வேண்டி இருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 07 பல்வேறு செயற்பாடு களின் மூலம் உழைத்திருந்த ரூபா 28,203,241 இற்கான தொகை ஒன்றினை வருமானம் என இனங்கண்டிருக்கவில்லை. | மேற்கூறிய 7 செயற்பாடுகள் மூலம் உழைக்கப்படும் வருமானம் செயற்பாட்டுத் தொழிற் பாடுகளின் மூலம் உருவாகிய வருமானம் அல்லாததினால் அவற்றை வருமானக் கூற்றில் உட்படுத்தப்படவில்லை. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிறுவனத்தின் அனைத்து வருமானங்களும் நிதி செயலாற்றல் கூற்றில் உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் மிகுதிப் பெறுமதி மற்றும் பயன்தரு சீவிய காலத்தினை கழித்து அனைத்து வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கும் காலப்பகுதின் இறுதித் திகதியில் உள்ளவாறு மீளாய்வு செய்ய வேண்டி இருந்ததுடன், எதிர்பார்க்கும் நிலைமைகள் மதிப்பீடுகளின் மூலம் முரண்படுமாயின் அந்த முரண்பாடுகளை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீடுகளின் வித்தியாசம் ஒன்று என கணக்கீடு செய்யப்பட வேண்டும். பல்கலைக் கழகத்தின் ரூபா 65,884,346 தொகை கிரயத்தையுடைய 02 சொத்து விடயங்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்காததுடன், மொத்தச் சொத்துக்களின் 52 சதவீதத்தை விட கூடிய பெறுமதி அடங்கியிருந்தது. | காணி, கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் மாத்திரம் மீள் மதிப்பீட்டு படிவத்தின் கீழ் பேணப்படுவதுடன் கழிவுத் துண்டுப் பெறுமதி பூச்சியமாகக் காணப்பட்ட மோட்டார் வாகனங்கள் உட்பட வாகன வகுப்பினை பெறுமதி மதிப்பீடு செய்து குறிப்பிட்ட சீராக்கல்கள் நிதிக்கூற்றுக் களில் மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம். ஏனைய சொத்துக்கள் 41 ஆம் பிரிவின் பிரகாரம் கிரய படிவத்தின் கீழ் பேணப்பட்டு வருவதுடன் வருடாந்த மிகுதிப் பெறுமதி மற்றும் பயன்தரு சீவியகாலத்தை மீளாய்வு செய்ய வேண்டிய தேவைப்பாடு ஒன்று ஏற்படவில்லை. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் பெறுமானத் தேய்வு ஆரம்பிப்பது அதனை பயன்படுத்துவதற்கு தயார் நிலைக்கு கொண்டுவந்த பின்னரெனினும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த 05 சொத்து வகுப்புக்களுக்காக முழு வருடத்துக்குமான பெறுமானத் தேய்வு கணிக்கப்பட்டதன் காரணத் தினால் ரூபா 1,824,990 தொகை பெறுமானத் தேய்வு மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | பெறுமானத் தேய்வு கணிப்பீட்டில் ஏற்பட்டிருந்த வழு ஒன்றாக இருந்ததுடன் அதற்கான சரிசெய்தல் 2020 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் பெறுமானத் தேய்வு கணித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக் கழகத்தின் 02 பீடங்கள் நடாத்தப்படும் 13 ஏக்கர் காணியை முறைப் பிரகாரம் உரித்தாக்கி பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு அல்லது குறிப்பொன்றின் மூலம் நிதிக்கூற்றுக்களில் வெளிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட காணி சட்ட ரீதியாக பல்கலைக் கழகத்திற்கு உரித் தாக்கியிருக்காமையால் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்படாததுடன், இது தொடர்பாக திருத்திய குறிப்பொன்று 2020 நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்ட ரீதியாக உரித் தாக்கப்படாவிடினும், தற்போது அனுபவிக் கப்படுவதினால் அதனை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | பொது ஒதுக்கத்துக்கான ஏனைய சீராக்கல்களின் மீதி ரூபா 20,430,979 தொகை எனினும் அதனை ரூபா 33,649,717 தொகை என முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை தனதாக்கல் ரூபா 144,661,558 தொகை எனினும் அதனை ரூபா 157,880,296 தொகை என காட்டப்பட்டிருந்த காரணத்தினால் அப் பெறுமதி ரூபா 13,218,738 தொகை | காசுப்பாய்ச்சல் கூற்றில் ஒட்டுமொத்த பாய்ச்சலுக்கு மேற்கூறிய சீராக்கல் மேற்கொள்ளப் பட்ட காரணத்தினால் தாக்கம் ஒன்று ஏற்பட்டிருக்காததுடன் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது முன்னைய ஆண்டுகளில் சொத்துக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட காசு அல்லாத கொடுக்கல் வாங்கல்கள் (Non cash transaction) சீராக்கல் மேற்கொண்ட போது | காசுப் பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மிகையாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | ஏற்பட்டிருந்த வழு ஒன்றின் காரணமாக இது ஏற்பட்டிருந்ததுடன், காசுப் பாய்ச்சல் கூற்றை திருத்தி சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| (இ) | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாமையினால் வழங்குனர்களிடம் அறவிடப்பட்ட தாமதக் கட்டணம் குறிப்பிட்ட வருடத்திற்கான வருமானம் என இனங்காணாமல் நிர்வாக அதிகார சபையினால் நிதியக் கணக்கொன்றிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 3,160,753 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டிருந்ததுடன், 2012 ஆண்டு முதல் 2019 திசெம்பர் 31 திகதி வரை அந்த நிதியக் கணக்கின் மீதி ரூபா 13,256,051 தொகையாக இருந்தது. | 2012 ஆண்டு முதல் அறவிடப்பட்டிருந்த அனைத்து உடன்படிக்கைகள் மற்றும் முறிகளை மீறல் தொடர்பாக அறவிடப் படும் பணம் இவ்வாறு நிதியக் கணக்கு ஒன்றிற்கு மாற்றப்பட்டு வழங்கல்கள் மற்றும் பதவியணி உடன்படிக்கைகள் மற்றும் முறிகள் மீறியமைக்காக பெற்றிருந்த பணம் ஒரே பேரேட்டுக் கணக்கில் பேணப்பட்டு முதலீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் தேவையான சரிசெய்தல்கள் மேற் கொள்ளப்படும். | அறவிடப்பட்ட தாமதக் கட்டணங்கள் பல்கலைக்கழகத்தின் வருமானம் ஒன்றென இனங்காண வேண்டும். |
| (ஈ) | 2015 ஜூலை 10 ஆந் திகதிய 02/2015 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்கள் விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் அனைத்து வருமானங்களும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு பல்கலைக்கழகம் செயற்படாமல் வாகன விற்பனை நிதியம் ஒன்றிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அந் நிதியத்தின் மீதி ரூபா 5,203,365 தொகையாக இருந்தது. | திறைசேரியில் இருந்து வருடாந்த நிதி ஏற்பாடு போதியளவினதாக கிடைக்காமையால் மேற் கூறிய பணத்தை திருப்பிச் செலுத்தாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் வாகனங்கள் விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடு களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 செலுத்த வேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டு முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 2,925,616 தொகையான கடன்கொடுத்தோர் உரிமை கோராமை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட கடன்கொடுத்தோர் மீதி தொடர்பாக வழங்கள் பிரிவை அறிவுறுத்தி அந்த மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், செலுத்தப்படாத மாணவ உதவி ரூபா 9,790,750 தொகை காணப்பட்டதுடன், அதில் 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை செலுத்தப்படாத மாணவ உதவி ரூபா 9,535,050 தொகை காணப்பட்டது. அந்த மாணவ உதவியை செலுத்துவதற்காக நிர்வாக அதிகார சபையின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கவில்லை. | செலுத்தப்படாத மாணவ உதவி மீதியில் காணப்பட்ட பணம் வேறாக கணக்கொன்றில் பேணப் பட்டிருக்காததுடன், கடந்த ஆண்டுகளில் போதியளவு மீண்டுவரும் நிதியம் கிடைத்திருக்காமையால் அந்த பணம் மீண்டு வரும் செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த துடன் போதியளவு நிதியம் சேகரமாகிய பின்னர் குறிப்பிட்ட நிதி ஏற்பாடு வழங்கிய நிறுவனத்திற்கு தீர்ப்ப தற்காக தேவையான நடவடிக்கை மேற்கொள் ளப்படும். | மாணவ உதவியாக கிடைத்திருந்த நிதியம் நிருவகத்தின் மீண்டுவரும் கருமங்களுக்காக பயன்படுத்தப்படக் கூடாததுடன் தாமதமின்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் V பகுதியின் 29(ஊ) பிரிவு | பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் அல்லாத நபர்களுக்காக பல்கலைக்கழத்தில் மீதிறன் பத்திரம் ஏனைய உயிர்புடைய திறன் களைப் பெற்றுக்கொள் வதற்கு ஏற்ற விதத்தில் ஆணைக் குழுவின் இணக்கத்துடன் வெளிவாரிப் பரீட்சை நடாத்த முடியும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கலைமானி வெளிவாரி பட்ட பாடநெறி தவிர ஏனைய பட்ட பாடநெறிகள் ஆரம்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப் பட்டிருக்கவில்லை. | தொலை மற்றும் தொடர் அலகின் மூலம் கலைமானி (வெளிவாரி) பட்டம் மாத்திரம் தற்போது வழங்கப்படுவதுடன் வணிகமானி (வெளிவாரி) பட்டம் ஒன்று வழங்கு வதற்காக பல்கலைக்கழக பேரவையின் அங்கீகாரத் தின் மீது முகாமைத்துவ மற்றும் நிதிப் பீடத்தின் ஒத்துழைப்புடன் பாடநெறி ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கால ரீதியான தேவைக்கு பொருந்தக் கூடிய விதமாக பட்டப் பாடநெறிகளை அறிமுகப்படுத்து வதற்கு மற்றும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 394(இ) | இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளின் பெறுமதி திணைக்களத் திற்கு கிடைத்த தொகை ஒன்றென கணிக்க வேண்டியதுடன், அதனை உரிய கணக்குகளுக்கு செலவு வைக்க வேண்டும். எனினும் பல்கலைக் கழகத்தின் 08 பீடங்கள் மற்றும் அலகுகள் தொடர்பாக 2016 ஆண்டு முதல் 2019 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 1,384,555 தொகை பெறுமதியான 301 காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டி | நி.பி. 392 இன் பிரகாரம் அந்தக் காசோலைகளுக்கு பதில் காசோலைகள் வழங்குவதற்கு நேரிடுவதன் காரணமாக தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் கணக்கிற்கு மாற்றப்பட்டி ருந்ததுடன், அந்த காசோலைகளுக்கு பதில் வேறு காசோலைகள் வழங்கப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் நி.பி.394 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | காசோலைகளின் செல்லுபடியாகும் காலம் மிகைத்துள்ள போது அக் காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ருந்ததுடன், நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| | (ii) நிதிப் பிரமாண இலக்கங்கள் 751, 752 மற்றும் 754 | பிரமாணங்களின் பிரகாரம் பண்டப் பதிவேடுகள் பேணப்பட்டு வந்திருக்கவில்லை. | பராமரிப்பு பிரிவிற்காக களஞ்சியக் கட்டுப்பாட்டாளர் பதவி ஒன்று ஏற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளதுடன் தற்போது சிற்றூழியர் ஒருவர் களஞ்சியப் பகுதியின் அலுவல் களுக்காக ஈடுபடுத்தப் பட்டுள்ளதுடன் உத்தியோகத்தர் ஒருவரை சேர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப் படுகின்றது. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக தாபனக் கோவையின் பிரிவு 40.1 | உயர் கல்வி நிறுவகத்தில் ஓய்வு காலங்களில் விடுமுறை பெற்று தம்மால் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுக்கக்கூடிய சேவைக்கு பாதகமான தாக்கம் ஒன்றை ஏற்படாதவிடத்து, ஏதேனும் விரிவுரையாளர் ஒருவருக்கு ஓய்வு காலங்களில் விடுமுறை பெற்றுக்கொள்ள முடியும். பொறியியல் பீடத்தில் விரிவுரையாளர் ஒருவருக்கு கல்வி காலப் பகுதியில் அதாவது 2018 செப்தெம்பர் 06 முதல் 2018 திசெம்பர் 05 வரை மற்றும் 2019 ஜனவரி 12 முதல் 2019 ஏப்ரல் 11 திகதி வரை சம்பளத் துடன் ஓய்வு விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்தக் காலப்பகுதிகள் இரண்டும் கல்விக் காலப் பகுதிகளாகக் காணப்பட்ட துடன் | குறிப்பிட்ட விரிவுரையாளர் 2019.01.01 திகதி கடமைக்கு சமுகமளித்து இருந்ததுடன் மீண்டும் 2019.01.12 முதல் 2019.04.11 திகதி வரை 03 மாத ஓய்வு விடுமுறை பெறப்பட்டிருந்தார். 2019.01.14 திகதி நடைபெற்ற 387 ஆவது நிர்வாக சபையினால் அவருடைய விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த தென கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். | உத்தியோகத்தர் களுக்கு விமுறைகள் வழங்கும் போது தாபனக் கோவையின் தேவைகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்ச்சியாக 02 சந்தர்ப்பங்களில் ஓய்வு விடுமுறை பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | 2019 ஜூலை 25 திகதிய SC & PMU/ GRANT/19 இலக்கங் கொண்ட வெளிநாட்டு மூலவள திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | வேறு அரசுகள்/ வெளிநாட்டு அபிவிருத்தி தரப்பினர், வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்கும் வெளிநாட்டு மானியங்கள் மற்றும் தொழிநுட்ப உதவிகள் வெளிநாட்டு மூலவள திணைக்களத்தின் ஊடாக அந்த திணைக்களத்தை அறிவுறுத்தல் மற்றும் இணக்கத்தின் மீது பெற்றுக்கொள்ள வேண்டும் என காட்டப்பட்டுள்ளது. அவ்வாறாயினும் பல்கலைக்கழகத்தில் மீளாய்வாண்டு இறுதி அளவில் ரூபா 131,440,631 இற்கான 08 செயற் திட்டங்கள் செயற்படுத் தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு இணக்கப்பாடு பெற்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வெளிநாட்டு மானியங்கள் பெற்றுக்கொள்ளும் போது வெளிநாட்டு மூலவள திணைக்களத்தின் அறிவுறுத்தல் மற்றும் இணக்கத்தின் மீது பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட அங்கீகாரத்தின் மீது வெளிநாட்டு மானியங்கள் பெற்றுக்கொள்ளப் பட வேண்டும். |
| (உ) | 2014 மார்ச் 25 திகதிய 05/2014 இலக்கங் கொண்ட பல்கலைக் கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பந்தி 5(1) | பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு ஆய்வு உதவி மற்றும் ஆய்வு படி செலுத்தும் போது ஆய்வு முகாமைத்துவக் குழு வினால் உத்தேச ஆய்வுத் தலைப்பின் ஆக்க பூர்வ தன்மையை மதிப்பீடு செய்தல் மற்றும் ஆய்வின் காலத்தை தீர்மானித்தல் மேற் கொள்ளப்பட வேண்டும் எனினும் ஆய்வு முகாமைத்துவக் குழுவினால் அறிக்கை களை மதிப்பாய்வு செய்தல் மேற்கொள்ளப் | ஆய்வுப் படிகள் செலுத்தும் போது உத்தேச ஆய்வு மற்றும் ஆய்வு அறிக்கையை கவனத்தில் எடுக்கப்படுகின்றது. மேலும் ஆய்வு மேற் கொள்ளப்பட்ட பின்னர் புதிய கண்டுபிடிப்புக்கள் சஞ்சிகைகளில் கட்டுரை களாக வெளியிடப் படுகின்றது. அனைத்து ஆய்வு முன்மொழிதல்கள் ஆய்வு உதவிக் குழுவினால் மதிப்பாய்விற்கு ஆளாக்கப்படுகின்றது | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஆய்வு முகாமைத்துவக் குழுவினால் ஆய்வின் ஆக்க பூர்வமான தன்மை தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பட்டிருக்கவில்லை. 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது ஆய்வுப் படிகள் தொடர்பாக ஆய்வுப் பத்திரங்கள் 2020 ஜனவரி 20 திகதி வரை சமர்ப்பித்திருக்கவில்லை. | என கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். | |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகார சட்டத்தின் 45 ஆம் பிரிவின் பந்தி XV மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் நிதி அமைச்சரின் இணக்கத்துடன் உரிய அமைச்சரின் மற்றும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பணம் ஏதும் முதலீடு செய்ய முடியாது எனினும், அதற்கு இணக்கமின்றி பல்வேறு நிதியக் கணக்குகள் காணப்படும் பணத்தை நிலையான வைப்புக்களில் மற்றும் நிதிச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 287,174,469 தொகை ஆகக் காணப்பட்டது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள முதலீடுகள் பல்கலைக் கழக அதிகார சட்டத்தின் 45 இன் 02 ஆம் பிரிவின் II மற்றும் XV பந்திகளின் பிரகாரம் நிர்வாக சபைக்கு வழங்கப்பட் டுள்ள அதிகாரத்தின் படி மற்றும் ஒவ்வொரு நிதியங்களின் குறிக்கோளின் படி பல்வேறு அங்கீகாரங் களின் கீழ் பணம் முதலீடு செய்யப்பட்டி ருந்ததுடன், இதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். | உரிய அங்கீகாரத்தின் மீது முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 381 இன் படி திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு ஒன்று திறக்கப்பட வேண்டியிருந்ததுடன், அவ்வாறு செயற்படாமல் 2017 ஆண்டில் 02 வங்கிக் கணக்குகள் மற்றும் 2019 ஆண்டில் 04 வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு | கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய வங்கிக் கணக்குகள் நடைமுறை வங்கிக் கணக்குகள் அல்லாததுடன் காசோலை கொடுப்பனவு ஏதும் இதனூடாக மேற் கொள்ளப்படாததினாலும் திறைசேரியின் நிதியங்கள் பயன்படுத் தப்படாமையினாலும், உத்தியோக பூர்வ வங்கிக் | அரச நிறுவனம் ஒன்றினால் ஆரம்பிக்கப்படுகின்ற அனைத்து கணக்கு களும் உத்தியோக பூர்வ கணக்குகளாக கணிக்கப்படுகின்றமை யால் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட |

| | | |
|---|---|---|
| இறுதியில் உள்ளவாறு இந்த 06 வங்கிக் கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 132,088,062 இற்கான மீதியொன்று காணப்பட்டது. | கணக்கு ஒன்று அல்லாத காரணத் தினால் திறைசேரியின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்படவில்லை. நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் மீது குறிப்பிட்ட கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டு செயற்பாட்டு விளைவுகள் ரூபா 828,409,127 இற்கான பற்றாக் குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 134,979,328 தொகையாக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 693,429,799 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. அந்த வீழ்ச்சிக்கு நுகர்வு சேவைக்காக ஒதுக்கம் ரூபா 675,903,643 தொகையினாலும் ஒப்பந்த சேவைச் செலவுகள் ரூபா 67,817,034 இனாலும் மற்றும் ஆளுக்குரிய சம்பளங்கள் ரூபா 770,567,662 தொகையினாலும் அதிகரித்திருத்தல் முக்கியமாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞானக் கல்விப் பிரிவு மற்றும் நோர்வே என்டர் பல்கலைக்கழத்திற்கும் இடையே மேற்கொள்ளப் பட்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் வருடாந்தம் பட்டப்பின் பட்டம் கற்கும் சில மாணவர்களுக்கு நேர்வே என்டர் பல்கலைக்கழகத்திற்கு செல்வதற்காக புலமைப் பரிசில் வழங்கல் மேற்கொள்ளப் படுகின்றது. இதற்காக பொருளியல் விஞ்ஞானம் மீதான பட்டப்பின் பட்டம் பட்டப் பின் டிப்ளோமா பாடநெறி பயிலும் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைந்திருந்தது. 2019 ஆண்டிற்காக இந்த புலமைப் பரிசில் வழங்கும் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் தேர்வுமுறையாக பயிலுனர் | நோர்வே என்டர் பல்கலைக் கழகம் மூலம் நடாத்தப்படும் இந்தப் பட்டப் பின் பட்டப் பாடநெறி உலகளாவிய அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் தொடர்பான பட்டப் பின்பட்ட பாடநெறி ஒன்றாக காணப்படுவதுடன், AAT அல்லது கல்வி நிர்வாகம் தொடர்பான திறன்தொழில் அல்லது பட்டப் பின்பட்ட பாடநெறியை கற்றிருத்தல் மேலதிக தகைமை ஒன்றாக கணிப்பதற்கு நேர்முகப் பரீட்சைக் குழு தீர்மானித்திருந்தது. | இவ்வாறான பாடநெறிகளுக்காக பொருத்தமான மாணவர்களை தெரிவு செய்வதற்காக புள்ளிகள் வழங்கும் போது பொருத்தமான தேர்வு முறை நிறுவப்பட்டு பொருளியல் விஞ்ஞானம் மீதான பட்டப் பின்பட்டம் பயிலும் மாணவர் களுக்கு அநியாயம் ஏதும் ஏற்படாதவாறு செயற்பட வேண்டும். |

விரிவுரையாளர்கள் சேர்க்கும் போது புள்ளிகள் வழங்கப்படும் தேர்வு முறையே கடைபிடிக்கப் பட்டிருந்தது. உதாரணமாக பட்டப் பின்பட்ட டிப்ளோமா, AAT மற்றும் பட்டயக் கணக்காளர் பரீட்சையில் Strategic Level - II மட்டத்துக்கு சமமாகக் கணித்து புள்ளிகள் வழங்குதல் பொருத்தமற்றது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் பொருளியல் கல்விப் பிரிவிற்கு பொருளியல் மற்றும் சமூகப் புள்ளிவிபரவியலுக்காக தற்காலிக விரிவுரையாளர்கள் சேர்ப்பதற்கு விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டிருந்ததுடன், சமூக புள்ளி விபரவியல் வியடயத்திற்காக கலைமானி அல்லது விஞ்ஞானமானி (விஷேட) புள்ளிவிபரவியல் பட்டம் மற்றும் விஞ்ஞானமானி (விஷேட) புள்ளிவிபரவியல் விடயத்துடன் பட்டமொன்றினைக் கொண்டுள்ள நபர்களுக்கு விண்ணப்பிக்க இயலுமாக இருந்தது. நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கும் போது பட்டப் பின் பட்டம் ஒன்றினை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக் குழு அங்கத்தவர்கள் மூவரும் 0, 05 மற்றும் 10 புள்ளிகள் என temporary Demostrator ஆக 02 வருடங்கள் மற்றும் ஆசிரியர் ஒருவராக 2½ வருட சேவைக் காலத்தை உடைய விண்ணப்பதாரி ஒருவருக்கு Profesional exprience க்காக உரித்தான 10 புள்ளிகளில் பரீட்சகர்கள் மூவரும் 0ம், 2ம், மற்றும் 2ம் ஆக வழங்கியிருந்ததுடன், temporary Demostrator ஆக 08 மாத கால அனுபவத்தை உடைய விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சகர்கள் மூவரினாலும் 3ம், 2ம் மற்றும் 1ம் ஆக புள்ளிகள் வழங்கப் பட்டிருந்தது. மேலும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரி களினால் கற்றிருந்த பட்டப் பின்பட்டம், பட்டப் பின் டிப்ளோமா பட்டம் ஆகிய கல்விப் பிரிவு பாடநெறி தேவைகளை போதியளவு அணவல் பெற்றிருக்காமை யால் பல்வேறு விதமாக விண்ணப்பதாரிகளுக்கு புள்ளி வழங்குவதற்கு நேர்முகப் பரீட்சைக் குழு வினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

மேலும் தற்காலிக அடிப்படையில் தெரிவு செய்யும் போது மிகவும் கவனம் செலுத்தியது சமூக புள்ளிவிபரவியல் பாடநெறி யின் விடயத் தொகுப்புக்காக நேரடியாக தொடர்புடைய விண்ணப்பதாரிகளை தெரிவு செய்வதாகும். அவ்வாறின்றி அனுபவம் அல்லது ஏனைய தகைமைகள் காணப்பட்ட மாத்திரத்தில் கல்விப் பிரிவின் தேவைக்கு போதியளவு பொருத்தமான காரணியாக இருக்கவில்லை.

சமமான தகைமை களுக்காக அனைத்து விண்ணப்பதாரி களுக்கும் சமமான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு புள்ளிகள் வழங்கப்படல் மேற் கொள்ளப்பட்டு தகைமை உடைய விண்ணப்பதாரியை தெரிவு செய்வதில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப் பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | Research and Publications இற்காக புள்ளி வழங்கும் போது விஞ்ஞானமானி விஷேட பட்டத்துக்கு மேலதிகமாக 02 வருட பட்டப் பின்பட்டம் ஒன்றினை உரிய விண்ணப்பதாரி ஒருவருக்காக பரீட்சகர்கள் குழுவினால் புள்ளி ஒன்றேனும் வழங்கியிருக்கவில்லை. | | |
| (இ) | வெளிவாரிப் பட்ட பாடநெறி பாடவிதானம் மாற்றப்பட வேண்டும் என 2013 ஆண்டின் போது இனங்கண்டு அதற்காக மானிடப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் பீட சபை, பல்கலைக்கழக பேரவை பல சந்தர்ப்பங்களில் முயற்சி எடுத்த போதிலும், மீளாய்வாண்டு ஒக்தோபர் மாதம் வரை பாடவிதானம் மாற்றம் செய்தல் செயற்படுத்துவதற்கு முடியாது இருந்தது. | தற்காலத்தில் புதுமுகப் படுத்தப்பட்ட கலைமானி பொது (வெளிவாரி) பட்டத்தில் தற்போதைய வணிக சூழலுக்கு பொருத்தமான தகவல் தொழில் நுட்பம், கணிதம், வணிகப் புள்ளிவிபரவியல் மற்றும் ஆங்கிலம் ஆகிய துறைகளில் புதிய விடயங்கள் உட்படுத்தப்பட்டுள்ளன. | காலரீதியான நாட்டின் தேவைக்கு பொருந்தக் கூடிய விதமாக பாடவிதானங்களை திருத்தி பாடநெறி யின் பண்புசார் தன்மையினை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்வி மற்றும் ஆய்வு அலுவல்களுக்காக நுழைவாயில் களை விரிவாக்கல், கல்வி மற்றும் ஆய்வு அலுவல்களின் பண்புசார் தன்மையினை மேம்படுத்தல், கல்வி மற்றும் ஆய்வு பொருத்தத் தன்மையை அபிவிருத்தி செய்தல் பல்கலைக் கழகத்தின் முக்கிய குறிக்கோள் எனினும் றுஹுனு பல்கலைக்கழகத்தின் மானிடப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம் மற்றும் முகாமைத்துவம் மற்றும் நிதி பீடத்தை சேர்ந்த போதனாசிரியர் களை ஆய்வுகளுக்கு தொடர்புபடுதல், ஆய்வுகளின் பண்புசார் தன்மையை கட்டுப்படுத்தல், ஆய்வுகளின் பொருத்தத் தன்மை மற்றும் அவற்றின் விளைவுகள் உரிய தரப்பினருக்கு சென்றடைதல் மிகவும் பலவீன மட்டத்தில் காணப்பட்டது. | தற்போது பீடத்தின் மூலம் சஞ்சிகை ஒன்று வருடத்திற்கு 2 பாகங்கள் கொண்டதாகவும் இலத்திரனியல் சஞ்சிகை ஒன்று வருடத்திற்கு நான்கு பாகங்கள் வீதம் சர்வதேச மட்டத்தில் ஆய்வு அமர்வுகளும் பல்கலைக் கழகத்தின் மூலம் நடாத்தப் படும் கல்வி அமர்வுகள் ஊடாகவும் ஆய்வுக் கட்டுரைகளை வழங்குவதற்கு பங்களிப்பு வழங்கப்படுகின்றேன். ஆய்வுக் கட்டுரைகள் பண்புசார் தன்மையை கட்டுப்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களின் பிரகாரம் | கணக்காய்விற்கு ஆளாக்கிய இரண்டு பீடங்களின் ஆய்வுக் குழுக்களின் பரிந்துரை உள்ளடங்கிய கோவை ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத துடன், சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுப் பிரேரணைகள் மற்றும் ஆய்வுப் பத்திரங்கள் மீது கவனம் செலுத்தும் போது ஆய்வுகளின் பண்புசார் தன்மை, பொருத்தத் தன்மை மற்றும் அவற்றின் விளைவு கள் |

| | | | |
|---|---|---|---|
| | | வெளி அவதானிப்பாளர்கள் இருவரினால் மதிப்பாய்வு செய்யப்படுகின்றது. அதன் காரணமான பண்புசார் தன்மை குறைந்த ஆய்வுக் கட்டுரைகள் வெளிவருதல் கட்டுப்படுத்தப்படுகின்றது. | துறையுடன் நெருங்குதல் தொடர்பாக முறை யான கட்டுப்பாடு ஒன்று காணப்படாமை யால் அதன் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | Norhed/CPDS கீழ் அமைதி மற்றும் அபிவிருத்தி கல்வி மீதான பட்டப் பின்பட்ட பாடநெறி ஒன்று நடாத்துவதற்காக நோர்வே அரசாங்கத்தின் மூலம் அனுசரணை வழங்கப்பட்டி ருந்தது. அதனூடாக தற்கால சமூகத்தில் காணப்படும் சமூகச் சிக்கல்கள் சமூக விஞ்ஞானம் சார் நுழைவு ஒன்றின் மூலம் ஆராய்வதற்கு எதிர்பார்ப்பதுடன், சமூக சிக்கல்கள் சமூகம் சார் வடிவமைப்பு ஒன்றாக தோற்றுவிக்கப்படுவது எவ்வாறு எனவும், அவ்வாறான சிக்கல்கள் சமூக விஞ்ஞானம் சார் கண்ணோட்டத்தில் காண்பது எவ்வாறு என்பதுவும் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப் படுகின்றது. அதன் பிரகாரம் இந்தப் பட்டப் பின்பட்ட பாடநெறி சமூக மோதல்களுடன் நேரடியாக தொடர்புடைய தொழில்களில் ஈடுபடும் தரப்பினர்களுக்கு பொருத்தமான பாடநெறி ஒன்றாக இருந்த போதிலும் பட்ட பரீட்சாத்திகளை தெரிவு செய்யும் போது அவ்வாறான காரணிகள் மீது கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | இந்த செயற்திட்டத்தின் மூலம் அமைதி மற்றும் அபிவிருத்தி கல்வி தொடர்பான பட்டப் பின்பட்ட பாடநெறி ஒன்று ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டு அனைத்து பாடவிதானங்களும் தயாரிக்கப்பட்டு முன்மொழிதல் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு பல்கலைக்கழக பேரவையின் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டது. பல்கலைக்கழகத்தில் காணப்படும் நிர்வாக நடைமுறைகளின் படி அந்தப் பாடநெறியை நடாத்துவதின் பொறுப்பு செயற்திட்டத்தின் பணி ஒன்று அல்லாததாக இருந்ததுடன், பாடநெறிக்கு மாணவர்களை தெரிவு செய்தல் பாடநெறிக் கட்டணத்தை தீர்மானித்தல் போன்ற விடயங்கள் செயற் திட்டத்தின் வரையறை களுக்கு புறம்பாக இருந்தது. | இந்தப் பாடநெறி புலமைப் பரிசில் முறைமை ஒன்றின் மீது செயற்படுத்தப் படுவதினால் அதன் விளைவுகள் நாட்டு க்கு பயன்படுத்தக் கூடிய வகையில் மாணவர்கள் சேர்ப்பதற்கு திட்ட மிடுவதில் கூடிய முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். இந்தத் துறை மற்றும் தொடர்புடைய தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆட்களுக்கு மற்றும் உட்புகுவதற்கு கருத்துடையவர்கள் மீது விஷேட கவனம் செலுத்தப்பட்டு பாடநெறி திட்டமிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அமைதி மற்றும் அபிவிருத்தி தொடர்பான பட்டப் பின் பட்ட பாடநெறி 04 அரையாண்டுகளை கொண்டி ருந்ததுடன், மூன்றாவது அரையாண்டில் கல்வி விடயங்கள் நேபாளத்தில் உள்ள Tribhuvan பல்கலைக் கழகத்தில் கற்பதற்காக வரையறுக்கப்பட்ட மாணவர் தொகையொன்றிற்கு புலமை பரிசில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அங்கு தகைமையுடைய மாணவர்களை தெரிவு செய்யும் போது பொருத்தமான தேர்வு முறை ஏற்படுத்தியிருக்கவில்லை. ஏற்படுத்தியிருந்த புள்ளி வழங்கும் தேர்வு முறைமையை செயற்படுத்தும் போதும் றுஹுனு பல்கலைக்கழகத்தின் மற்றும் ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் கலைமானிப் பட்டத்தை உடைய 05 மாணர்களுக்காக பட்டத்தின் தன்மைக்கு உரிய மொத்த புள்ளியான 10 உம் வழங்கப்பட்டிருந்ததுடன், றுஹுணு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமானி பட்டத்தை உடைய மாணவர் ஒருவருக்கு மற்றும் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைமானிப் பட்டத்தை உடைய மாணவர் ஒருவருக்கு புள்ளிகள் வழங்கப் பட்டிருக்கவில்லை. மேலும், முதலாவது பட்டத்திற்காக புள்ளிகள் வழங்கப்படாதிருந்த மாணவர் ஒருவருக்கு பட்டப் பின் பட்டத்திற்காக 2 புள்ளிகளும், மாவட்ட செயலகத்தின் அபிவிருத்தி உதவியாளர் பதவி ஒன்றில் கடமை புரியும் உத்தியோகத்தர் ஒருவருக்கு கற்பித்தல் அனுபவத்திற்காக 04 புள்ளிகள் வழங்கப்பட்டிருந்ததால், ஒரே சீரான புள்ளி வழங்கும் முறை ஒன்று அவதானிக் கப்படவில்லை. | இந்த செயற்திட்டத்தின் மூலம் புலமைப் பரிசில்கள் வழங்கும் போது முக்கியமாக கடைபிடிக்கப் படுகின்ற நடைமுறை ஒன்றாவது இந்தப் புலமைப் பரிசில் பெறுவோர் பாடநெறியை பூர்த்தி செய்த பின்னர் பல்கலைக்கழக சேவைக்கு இணைக்கக் கூடிய இயலுமை ஆகும். அதன் பிரகாரம் 04 வருடங்களுக்கான சமூக விஞ்ஞான விடயத் துறையுடைய பட்டம் ஒன்று பெற்றிருத்தல், கௌரவ சித்தி ஒன்று பெற்றிருத்தல் போன்ற விடயங்கள் மீது முக்கியத்துவம் வழங்கப் படுகின்றது. அதே போல் தொழிலின் தன்மை மற்றும் பட்டப் பின்பட்டத்திற்கு கற்பித்தலில் அனுபவம் பட்டம் மற்றும் ஏதேனும் மட்டத்தில் சமமாக இருத்தல் என்பதை கவனத்தில் எடுத்து செயற்பட்டதாக பாடநெறி கூட்டிணைப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | இவ்வாறான பட்டப் பாடநெறிகளுக்காக புலமைப் பரிசில் களை வழங்கப்படும் போது பொருத்தமான தேர்வு முறையை ஆக்கி அதன் படி தகைமையுடைய மாணவர்களை மாத்திரம் தெரிவு செய்தல் மேற்கொள் ளப்பட வேண்டும். |
| (ஈ) | மேற்கூறிய பட்டப் பின் பட்ட பாடநெறியின் இரண்டாவது மாணவர் தொகுதியின் முதலாவது அரையாண்டில் 05 பாட விடயங்களுக்காக 33 விரிவுரை மணித்தியாலங்களும் இரண்டாவது அரையாண்டில் 05 பாடங்களுக்காக 33 விரிவுரை மணித்தியாலங்கள் மற்றும் மூன்றாம் அரையாண்டில் 05 பாடங்களுக்காக 71 விரிவுரை மணித்தியாலங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தது. | பட்டப் பின்பட்ட பீடத்தினால் தற்போது விடயங்கள் பரிசோதனை செய்யப்படு வதுடன் அக் காலப் பகுதியுள் இருந்த பாடநெறி கூட்டிணைப்பாளர்களை தொடர்புகொள்ளல் முடியாமையால் சரியான தகவல்களை வழங்குவதற்கு இச்சந்தர்ப்பத்தில் இயலாதுள்ளது. பல்கலைக் கழகங்கள் உண்மை நிலைமைக்கு ஆக்கப்பட்ட பின்னர் உடனடியாக | அனைத்துப் பாடங்களுக்கான விடயங்களும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் பரீட்சை நடாத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தேவையான தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என கருணையுடன் அறிவிக்கின்றேன். | |
| (உ) | (i) கருவாவின் பெறுமதியை அதிகரிப்பதன் மூலம் பண்புசார் விதமாக கருவாவின் ஏற்றுமதிச் சந்தையை அதிகரித்து சிறு ஏற்றுமதி பொருளாதாரத்தை வலுப்படுத்துவதை பிரதான குறிக்கோளாகக் கொண்டு செயற்திட்டம் ஒன்று தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பிரதேசங்கள், கருவாவின் வகைகள் வயது மற்றும் வைப்புச் செய்யப்பட்ட காலத்தின் படி கருவாவின் இரசாயன இணைவு உயிரியல் செயற்பாட்டுத் தொகுதிகளில் மாற்றங் களை ஆய்வு செய்து மிகவும் ஆக்கபூர்வமான மூலவளங்கள் மற்றும் பிரதேசங்கள், கருவா பரித்தலுக்கு பொருத்தமான காலம், மருந்துகள் செய்வதற்கு வளர்ப்பதற்கு தேவையான வைப்புக் காலத்தின் படி மிகவும் ஆக்கபூர்வமான கருவா மூலப்பொருளை பரிந்துரைத்தல் பல்கலைக் கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. செயற் திட்ட காலத்தின் ¾ பகுதி முடிவடைந்திருந்த போதிலும் சமர்ப்பிக்கப் பட்டிருந்த முன்னேற்ற அறிக்கையின் படி Biochemical Profile உரிய Profile 50 இல் Profile 02 தொடர்பாக மாத்திரம் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருந்தது. | இந்த விடயங்கள் தொடர்பாக எஸ்என்பீ/எம்ஆர்/சீ/று.19/வி12 கணக்காய்வு ஐய வினா தொடர்பான அவதானிப்பு தொடர்பாக பல்கலைக் கழகத்தின் நிர்வாக சபை விஷேட கவனம் செலுத்தி செயற்பட்டு வருவதுடன் நிர்வாக சபையினால் இது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானத்தின் மீது எதிர்கால நடவடிக்கை மேற்கொள் வதற்கு எதிர்பார்த்திருப்பதாக உங்களுக்கு கருணையுடன் அறிவிக்கின்றேன். | ஆய்வுகளின் தலைப்பில் அடங்கக் கூடிய விதமாக அனைத்து விடயங்களும் அடங்கும் விதத்தில் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டு ஆய்வின் குறிக்கோளை நோக்கி நெருங்கு வதற்காக செயற்பட வேண்டும். |
| | (ii) கருவா செயற்திட்டத்தின் செயற்திட்ட திட்டமிடலின் படி காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் காணப்படும் விவசாய அதிகாரப் பிரதேசங்களில் இருந்து மாதிரிகளை பெற்றுக் கொள்வதற்கு திட்டம் இடப்பட்ட போதிலும் களுத்துறை மாவட்டத்தில் இருந்து ஒரு மாதிரி ஏனும் பெற்றிருக்காததுடன் இரத்தினபுரி மாவட்டத்தில் 10 இடங்களில் 09 இடங்களில் இருந்து | இந்த விடயம் தொடர்பாக எஸ்என்பீ/எம்ஆர்/சீ/று.19/வி12 கணக்காய்வு ஐய வினா தொடர்பான அவதானிப்பின் மீது பல்கலைக் கழகத்தின் நிர்வாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட்டு செயற்பட்டு வருவதுடன் நிர்வாக சபையினால் இது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானத்தின் மீது எதிர்கால நடவடிக்கை | திட்டமிட்டுள்ளவாறு அனைத்துப் பிரதேசங்களும் அடங்கக் கூடியவாறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு எதிர்பார்த்த விளைவினை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| மாதிரிகள் பெற்றிருக்க வில்லை. பிரதேச முரண்பாடுகளின் படி மாதிரிகள் பெற்றுக் கொள்ளாமையால் செயற்திட்டத்தின் குறிக்கோளை நோக்கி நெருங்க முடியுமா என சிக்கல் நிலைமை காணப்பட்ட தென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என உங்களுக்கு கருணையுடன் அறிவித்துக் கொள்கின்றேன். | |
| (iii) மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழான ஆய்வு தொடர்பாக 02 தத்துவமானி பட்டப் பாடநெறிகள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன்படி ஆய்வுக் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்கு பொருத்தமான வகையில் இரசாயன இணைவின் மாற்றங்கள் உயிரியல் செயற்பாடுகள் அதற்கான கலவைகளை இனங்காணல் மற்றும் கருவாவில் காணப்படும் இரசாயன இணைவினை பண்புசார் விதமாகவும், பொருண்மை யாகவும் பகுப்பாய்தல், மீள் ஒக்சி எதிர்ப்பு காரணி தன்மை மீள் புற்றுநோய் காரணி தன்மை, நீரிழிவு அழித்தல் தன்மை தொடர்பாக ஆய்வு செய்தல் என்ற 02 தலைப்புகளின் கீழ் பரிசோதனை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் சுமார் 02 வருடங்கள் கடந்த பின்னர் ஆய்வு அறிக்கை மேற்பார்வையாளரினால் ஆய்வுத் தலைப்பு மாற்றப்பட்டிருந்தது. இவ்வாறு ஆய்வு கற்கைத் துறை மாற்றப்படுவதன் மூலம் செயற் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோளை நோக்கி நெருங்குவதற்கு முடியாது உள்ளது என அவதானிக்கப்பட்டது. | இந்த விடயம் தொடர்பாக எஸ்என்பீ/எம்ஆர்/சீ/று.19/வி12 கணக்காய்வு ஐய வினா தொடர்பான அவதானிப்புக் கள் மீது பல்கலைக்கழக நிர்வாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட்டு செயற்பட்டிருப்பதுடன் நிர்வாக சபையினால் இது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானத்தின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொள் வதற்கு எதிர்பார்ப்பதாக உங்களுக்கு கருணையுடன் அறிவித்துக் கொள்கிறேன். | இச் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோளை நெருங்குவதற்கு தத்துவமானி பட்டப் பாடநெறிகள் 02 ஊடாக எதிர்பார்த்த விளைவுகளை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பொது கலைமானி வெளிவாரி பட்டப் பாடநெறி பரீட்சைகள் 03 கட்டங்களாக நடாத்தப் பட்டிருந்ததுடன், பரீட்சை வருடாந்தம் நடாத்தப்பட வேண்டும் என பல்கலைக்கழக பேரவையினால் விதிக்கப்பட்ட கட்டளையின் படி காண்பிக்கப் படுகின்றது. அவ்வாறாயினும், ஒவ்வொரு கட்டங்களுக்காக பாடநெறிக்காக பதிவு செய்திருந்த மாணவர் களுக்காக பரீட்சைகள் நடாத்துதல் 01 மற்றும் 03 வருடங்களுக்கு இடைப்பட்ட கால தாமதத்தின் பின்னர் நடாத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பட்டப் பரீட்சாத்தி களுக்கு தமது பட்டத்தை பூர்த்தி செய்வதற்கு 06 வருடங்களை விட கூடிய காலம் ஒன்று எடுத்திருந்தது என அவதானிக்கப்பட்டது. | பாடநெறியின் பரீட்சைகளை வருடாந்தம் நடாத்துவதற்கு முடியாமைக்கான காரணங் களில் கருந்தரங்குகள் விரிவுரைகள் விடைத்தாள் பரீட்சித்தல், பெறுபேறுச் சபைகள் நடாத்துதல் ஆகிய அனைத்து விடயங்களும் மேற்கொள்ளப்படுவது மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் ஆசிரியர் குழாமின் பங்களிப்பு மூலம் நடாத்தப் படுவதுடன் அவர்களுக்கு உரிய பீடத்தின் கடமை களுடன் மோதல் ஏற்படாத வகையில் தொலை மற்றும் தொடர் கல்வி அலகின் கருமங்களை நடாத்துவதற்கு நேரிட்டுள்ளது. இது தவிர கல்வி, கல்வி சாரா மற்றும் மாணவர்கள் ஆகிய மூன்று தரப்பினரின் தொழில்சார் நடவடிக்கைகள் என்பனவும் பரீட்சையை உரிய விதத்தில் நடாத்துவதற்கு தடையாக இருந்தது. | இந்த நடைமுறை யினை விரைவுபடுத்தி குறைந்த காலத்தில் பட்டதாரி ஒருவர் உருவாவதற்கு முடியுமான வகையில் திட்டங்கள் தயாரிக் கப்பட்டு அவற்றை செயற்படுத்துதல் மற்றும் இளைஞரின் சக்தியை தொழிற் சந்தைக்காக உரிஞ்சக் கூடிய விதமான வேலைத் திட்டம் ஒன்று நிறுவப்பட வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1998 ஆகஸ்ட் 18 திகதிய 737 ஆம் இலக்க பல்கலைக்கழகங் கள் மானிய ஆணைக்குழு சுற்றறிக்கை உடன்படிக்கை மற்றும் முறிகளை மீறுவதன் மூலம் கிடைக்கக் கூடிய அனைத்துப் பணமும் நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியலில் முதலீடு செய்து அந்த முதலீட்டின் மூலம் கிடைக்கக் கூடிய வட்டி வருமானத்தை பல்கலைக்கழக பதவியணியினருக்காக தேசிய மட்டத்தில் ஏற்பாடு செய்யப்படும் அமர்வுகள், பயிற்சிகள் மற்றும் குறுகிய கால பயிற்சிப் பாடநெறிகளுக் காக அதே போல் ஆய்வுகள் மற்றும் வெளியீடுகளை | எதிர்காலத்தில் மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் வட்டி வருமானத்தை செலவிடுதல் தொடர்பாக தேர்வு முறை மற்றும் கொள்கை தொகுதி ஒன்று தயாரிக்கப்பட்டு நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் படி அப் பணத்தை பயன்படுத்துவதற்கு தேவையான விடயங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. | பதவியணியினருக்கு பயிற்சி வழங்குவதற் காக திரண்ட நிதியத்தின் பணத்தை பயன்படுத் தாமல் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த நிதியத்தின் வட்டி வருமானத்தை பயன்படுத்த வேண்டும். |

வெளியிடுவதற்காக தேவையான பணம் வழங்குவதற்காக மேற்கொள்ள வேண்டும் என காட்டப்பட்டுள்ளது. எனினும் பல்கலைக் கழகத்தினால் 2019 திசெம்பர் 06 திகதி வரை உடன்படிக்கைகள் மற்றும் முறிகளை மீறிய உத்தியோகத்தர்களிடம் ரூபா 40,200,000 இற்கான தொகை ஒன்று அறவிடப்பட்டு நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றின் மூலம் உழைக்கப்பட்ட ரூபா 5,005,610 தொகைக்கான வட்டி வருமானம் மேற்கூறிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படாமல் நிலையான வைப்பு நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்படக் கூடிய விதமாக முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2018 நவம்பர் 26 திகதிய 15/2018 இலக்கங் கொண்ட பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழக பதவியணியினருக்காக அக்ரஹார காப்புறுதி திட்ட முறைமை ஒன்று அறிமுகப் படுத்துவதற்காக தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. அதன் பிரகாரம் தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியம் ஒன்று நிறுவுவதற்கும் அதன் தவணைப் பணத்தை செலுத்துவதற்காக ஊழியர் பங்களிப்பு பெற்றுக்கொள்வதன் மூலம் அல்லது பல்கலைக் கழகத்தின் சுயமாக உருவாக்கிய நிதியத்தின் மூலம் பயன்படுத்த வேண்டும் என காட்டப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்காத முறையில் பல்கலைக்கழக திரண்ட நிதியத்தில் இருந்து ரூபா 20 மில்லியன் தொகை, பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்தில் இருந்து ரூபா 10 மில்லியன் தொகை மற்றும் உடன்படிக்கைகளை மீறல் காரணமாக வழங்குனர்களிடம்

காப்புறுதி நிதியத்திற்காக பயன்படுத்தப்பட்ட மேற்கூறிய நிதியங்கள் நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அவை பல்கலைக்கழகத் திற்கு திறைசேரியில் இருந்து கிடைத்த நிதியம் அல்லாததுடன் பல்கலைக் கழகத்தினால் உருவாக்கிக் கொண்ட வருமானம் என கணக்காய்வின் கவனத்துக்கு கொண்டுவருகின்றேன்.

குறிப்பிட்ட வருமானங்கள் மற்றும் நிதியம் சுயமாக உருவாகிய நிதியங்கள் அல்லாததினால் அக்ரஹார காப்புறுதி நிதியம் ஒன்று ஆரம்பிப்பதற்கு பயன்படுத்த முடியாத துடன் அவற்றிற்காக குறிப்பிட்ட குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும்.

அறவிடப்பட்ட பணத்தில் இருந்து ரூபா 10 மில்லியன் ஆக மொத்தம் ரூபா 40 மில்லியன் அக்ரஹார காப்புறுதி நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது.

## 3.4 நிதியங்களின் குறை பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத் தொகை ரூபா 31,063,277 தொகைக்கான ஆய்வு உதவி மீதியில் 2014 ஆம் ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை பயன்படுத்தப்படாமல் இருந்த ஆய்வு உதவிகள் ரூபா 2,127,809 தொகை காணப்பட்டதுடன், அந்த உதவி நிதியங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்படுவதற் கான காரணத்தை கண்டறிந்து அவற்றை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | குறை பயன்பாட்டு ஆய்வு உதவி செயற்திட்ட தேர்வு முறைக்கு மற்றும் பாதீட்டிற்கு ஏற்றவாறு பயன்படுத்தும் படி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், செயற்படாத மற்றும் முடிவடைந்த ஆய்வுச் செயற் திட்டங்களின் மீதிகள் தொடர்பாக எதிர்காலத்தில் நிதி உப குழுவின் மற்றும் நிர்வாக சபையின் அறிவுரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படும். | குறை பயன்பாட்டு ஆய்வு உதவிகள் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெகுமதிகள் மற்றும் நன்கொடை நிதியத்தில் ரூபா 612,906,756 இற்கான மீதிகளின் கூட்டுத்தொகை ஒன்று காணப்பட்டதுடன், அக் கணக்கு களில் கூட்டுத்தொகை ரூபா 12,918,952 தொகைக்கான 22 கணக்குகள் 03 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலம் செயற்படாத நிலைமையில் காணப்பட்டது. அந்த நிதியம் குறிப்பிட்ட விடயங்களுக்காக பயன்படுத்தப் படாமல் குறை பயன்பாட்டுடன் காணப்படல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | குறை பயன்பாட்டு வெகுமதி மற்றும் நன்கொடை நிதியத்தின் மீதிகள் நிதியத்தின் தேர்வு முறை மற்றும் பாதீட்டுக்கு ஏற்ற விதத்தில் பயன்படுத்தும் படி குறிப்பிட்ட உத்தியோகத்தர் களை அறிவுறுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறை பயன்பாட்டு வெகுமதி மற்றும் நன்கொடை நிதியத்தினை பயன்தரு விதமாக பயன்படுத்துவற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக | காளான் சார்ந்த பெறுமதியை அதிகரிக்கும் உற்பத்திகளை | இந்த துறையில் ஈடுபடும் விவசாயிகள் |

| | | |
|---|---|---|
| மற்றும் விவசாயிகளுக்கு சுய கல்வி ஒன்றின் மூலம் தமது விவசாய விடயங்களை அபிவிருத்தி செய்வதற்கு வழிகாட்டல் ஒன்றினை வழங்கும் நோக்குடன் L3F செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் ஒரு விடயமாக பெறுமதியினை அதிகரிக்கும் உற்பத்திகளை அறிமுகப் படுத்தல் மற்றும் வியாபாரத் திட்டம் ஒன்றை தயாரிக்கும் முறை தொடர்பாக விவசாயிகளை அறிவுறுத்தல் இனங்காணப்பட்டிருந்ததுடன், அதற்காக அச்சாறு, மோஜு, சட்னி, பய்ம் போன்ற காளான் சார் உற்பத்தி தொடர்பாக பயிற்சி ஒன்று, தெரிவு செய்யப்பட்டு காளான் உற்பத்தியாளர் தொகுதி ஒன்றிற்கு 2018 ஆண்டின் போது நடாத்தப் பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டு இறுதி வரை ஒரு விவசாயியேனும் காளான் சார்ந்த உற்பத்திகள் தொடர்பான கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்காததுடன் துணை உற்பத்திகளுக்கு பயன்படுத்தக் கூடிய அளவு மிகை உற்பத்தி விவசாயிகளிடம் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | விவசாயிகளுக்கு அறிமுகப் படுத்துவதற்காக செயற்திட்ட த்தின் மூலம் செயலமர்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அவற்றின் மூலம் செய்யக்கூடிய பொருட்கள் தொடர்பாக அவர்களை அறிவுறுத்தி வலுப்படுத்துதல் மாத்திரம் இச் செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றிற்காக இறக்குமதி செய்யப்பட்டிருந்த உணவுப் பண்டங்கள் (காளான் உற்பத்தி பொருட்கள்) உடன் போட்டி இடுவதெனின், பண்புசார் தன்மையுள்ள உற்பத்தி மேற்கொள்ளப்பட வேண்டி இருந்ததுடன், நுகர்வோர் கவர்ச்சி அரச கொள்கைகளுடன் இணக்கஞ் செய்தலும் விவசாயிகள் அவர்களின் வியாபாரத்தை விரிவாக்கல் மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இன்றேல் தொடர்ச்சியான உற்பத்தி ஒன்றினை வழங்குவதற்கு முடியாது. | மிகவும் குறைந்த வருமானம் பெறக் கூடியவர்களாக இருந்ததால் அவர்களின் வியாபாரத்தை விரிவாக்குவதற்கு தேவையான நிதி உதவிகளை பெற்றுக் கொள்ளக் கூடிய விதமாக செயற்திட்டம் திட்ட மிடப்பட்டிருந்தால் மிகவும் வெற்றிகரமான செயற்திட்டம் ஒன்றாக இருந்திருக்கக்கூடும். அதனால் அது தொடர்பாக கவனம் செலுத்தி செயற் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |

### 3.5 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கருவா ஆய்வு செயற்திட்டத்தின் மூலம் ரூபா 3,955,000 தொகை செலவிடப்பட்டு 2018 ஏப்ரல் 26 திகதி GC உபகரணம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டி ருந்தது. கணக்காய்வுத் திகதியாகிய 2019 திசெம்பர் வரை ஆய்வு நடவடிக்கை எதற்கும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன், அது பயன்படுத்தக் கூடிய நிலைமை யிலும் காணப்படவில்லை. | இவ் விடயம் தொடர்பாக எஸ்என்பீ/எம்ஆர்/சீ/று19/12 கணக்காய்வு ஐய வினா தொடர்பான அவதானிப்புக்கள் மீது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபை விஷேட கவனம் செலுத்தி வருவதுடன் நிர்வாக சபையினால் இது தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானத்தின் மீது தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக கருணையுடன் அறிவிக்கின்றேன். | தேவையினை இனங்கண்டு நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக பணம் பயன்தரு விதமாக பயன்படுத்தக் கூடிய விதத்தில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுத் தலைப்பின் கீழ் ஏற்பாட்டுத் தொகையை மிகைத்து செலவு செய்யப்பட்டி ருந்த காரணத்தினால் 15 மூலதன செயற் திட்டங்களுக்கான நிதி ஏற்பாட்டுத் தொகையை மிகைத்து ரூபா 143,581,874 இற்கான செலவொன்று மேற் கொள்ளப்பட்டு அந்த செலவு ஈடுபாட்டுப் பொறுப்பொன்றென காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆண்டின் போது ருஹுனு பல்கலைக்கழகத் திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மூலதன கூட்டு ஏற்பாடு (Capital Block Grant) ரூபா 604 மில்லியன் தொகையாக இருந்த போதிலும் 2019 ஆண்டின் போது உண்மையாக கிடைத்த மூலதன மானியம் ரூபா 340 மில்லியனாக காணப்பட்ட துடன், அதன் காரணமாக மூலதனச் செலவு மதிப்பீட்டுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 264 மில்லியன் நிலுவை ஒன்று காணப்பட்டது. | மூலதன சொத்துக்கள் தனதாக்கும் போது கிடைத்திருந்த நிதி ஏற்பாட்டுத் தொகை மீது கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | SLUG விளையாட்டு விழா ஞாபகார்த்தமாக மயில் அடையாளமிடப்பட்ட 4,000 டீ சேட்கள் அச்சிடப்பட்டிருந்த துடன் 2020 ஜனவரி வரை ரூபா 1,262,030 தொகை கிரயத்தையுடைய 2,086 டீ சேட்கள் மற்றும் ரூபா 412,275 தொகை பெறுமதியான விற்பனை செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த பண்ட இருப்பொன்றும் மீதியாக காணப்பட்டிருந்தது. | ஆரம்ப மற்றும் இறுதி கொண்டாட்டங்களின் போது மாணவர் பங்களிப்பு குறைந்த மட்டத்தில் காணப்படல் மற்றும் விளையாட்டு ஆரம்ப மற்றும் இறுதி கொண்டாட்டங்கள் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த திறந்த விளையாட்டுத் திடலுக்கு பதிலாக அக் காலப்பகுதி காணப்பட்ட மிகை மழை மற்றும் பாதிக்கக்கூடிய ஏனைய காரணிகள் மீது உள்ளக கேட்போர் கூடத்தை (RTMA) பயன் படுத்திய காரணத்தினால் இந்த ஞாபகார்த்த கூட்டங்களில் விற்பனைக் கான சந்தர்ப்பங்கள் காணப்படாமை பாதித்திருந்தது. | அரசாங்கப் பணம் உச்சமட்ட பயன்தரு விதத்தில் பயன்படுத்துவதற்கு செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.7 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2012 ஆகஸ்ட் 07 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2012 மற்றும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.4 பிரகாரம் ஒப்பந்த வேலைகளின் முரண்களை குறைப்பதற்காக பெறுகை நிறுவனத்தினால் அனைத்து தொழில்சார் முயற்சிகளும் மேற்கொள்வது தொடர்பாக பொறுப்பாக இருக்க வேண்டும் என காட்டப்பட்டுள்ளது. அவ்வாறாயினும், விஞ்ஞான பீடத்தின் திருத்த வேலைக்கான நிர்மாண வேலையில் ஆரம்ப மதிப்பீட்டு தொகை மற்றும் இறுதி சிட்டையிடலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கும் இடையே 70 விடயங்களில் 24 விடயங்கள் 14 சதவீதம் மற்றும் 148 சதவீதத்துக்கு இடைப்பட்ட முரண் ஒன்று ஏற்பட்டிருந்தது. | திருத்த வேலை அலுவல்களுக்காக குறிப்பிட்ட வேலைகள் மேற்கொள்ளும் போது பல்வேறு விதமாக ஏற்படக் கூடிய சிக்கல்கள் கணிப்புப் பத்திரம் தயாரிப்பதற்கு முன்னர் இனங்காண முடியாதிருப் பதுடன் விடயங்களின் முரண்கள் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் காணப்படுகின்றது என குறிப்பிடுகின்றேன். | பெறுகை வழிகாட்டல் கோவையின் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் சுற்றறிக்கையின் பிரகாரம் இயன்றளவு ஒப்பந்த வேலை களின் விலை முரண்களை குறையக் கூடிய விதமாக முரண்கள் கணிப்புச் சிட்டைகள் தயாரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

### கல்விப் பதவியணி

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | பல்கலைக்கழகத்தின் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீட கல்வி பதவியணியினின் விரிவுரை நடாத்தும் செயலாற்றல் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்வதற்காக 09 கல்விப் பிரிவுகளின் தகவல்கள் அழைக்கப்பட்டிருந்த போதிலும், 04 கல்விப் பிரிவுகள் மாத்திரம் தகவல்களை சமர்ப்பித்திருந்தன. அந்த தகவல்களின் படி ஒரு விரிவுரையாளரின் ஒரு வாரத்தில் விரிவுரை நடாத்தும் செயலாற்றல் 03 மணித்தியால ங்களுக்கும் 14.8 மணித்தியால ங்களுக்கும் இடைப்பட்ட வீச்சு அளவினைக் | விரிவுரையாளர்களுக்கு அரையாண்டில் விரிவுரை மணித்தியாலங்கள் சாட்டும் போது அவர் ஈடுபட்டிருக்கும் ஏனைய கல்வி விடயங்களிலும் கவனம் செலுத்தப்படும். பட்டப் பின் பட்ட கல்வி அலுவல்களில் ஈடுபட்டுள்ள விரிவுரையாளர் களுக்கு (முழுக் காலமும் விடுமுறை பெறாமல் பட்டப் பின் பட்ட கல்வியில் ஈடுபட்டுள்ள விரிவுரையாளர்களுக்கு) பொதுவாக விரிவுரை மணித்தியாலங்கள் சாட்டப்படும் போது தளர்ந்த முறைமை | துணைவேந்தரின் இலக்கம் 03/2016 மற்றும் 2016 திசெம்பர் 30 திகதிய சுற்றறிக்கை ஏற்பாடு களின் படி செயற்பட்டு மனித வளத்தின் உச்சமட்ட பயன்பாட்டை பெற்றுக்கொள்வதற் காக நடவடிக்கை எடுக்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டிருந்தது. | ஒன்று கடைபிடிக்கப்படுகின்றது. அதே போல் வேலைகளை அணவல் செய்வதற்காக ஏனைய விரிவுரையாளர் களின் சேவையை பெற்றுக் கொள்வதால் இந்த முறையற்ற விரிவுரை மணித்தியாலம் வழங்கள் காணக்கூடியதாக இருந்தது. இந்த நிலைமை கல்வி ஆண்டிற்கு ஆண்டு வித்தியாசப்படுகின்றது. | |
| (ஆ) | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு செயலாளரின் இலக்கம் UGC/AC/QA/GEN மற்றும் 2015 மே 07 திகதிய ஒழுக்கநெறி மற்றும் கலைப் பொறுப்பு தொடர்பாக வெளியிடப்பட்ட உபவேந்தரின் இலக்கம் 03/2016 மற்றும் 2016 திசெம்பர் 30 திகதிய உள்ளகச் சுற்றறிக்கையின் படி விரிவுரை யாளர்களினால் நடாத்தப்பட வேண்டிய விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கையை விட குறைவாக விரிவுரைகள் நடாத்தியிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அதாவது குறிப்பிட்ட விரிவுரை மணித்தியால எண்ணிக்கையை விட 80 சதவீதத்திற்கும் 13 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சு அளவினை விட குறைவாக 08 விரிவுரையாளர் களினால் விரிவுரை நடாத்தப்பட்டிருந்தது. | ஏதேனும் அத்தியவசிய தேவைகளில் ஈடுபடுதல் பட்டப் பின் பட்ட ஆய்வு விடயங்கள் மற்றும் திறன்தொழிலுக்காக முற்தேவை பாடநெறிகள் கற்பதற்காக விரிவுரையாளர் கள் விடுமுறைகள் பெற்றுக் கொள்ளாமல் அவ் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு பொதுவாக குறைந்த விரிவுரை சாட்டுதல் ஒன்று திணைக்கள மட்டத்தில் மேற்கொள்ளப் படுகின்றது. | துணைவேந்தரின் இலக்கம் 03/2016 மற்றும் 2016 திசெம்பர் 30 திகதிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் இரண்டு கல்விப் பீடத்தை சேர்ந்த கல்விப் பதவியணியில் 25 சதவீதத்தை விட மிகைத்த அளவினர் கொண்ட கல்வி மற்றும் ஏழாண்டு விடுமுறை பெற்றிருந்தனர். | சில சந்தர்ப்பங்களில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ஏழாண்டு விடுமுறை பெற்றிருந்த சந்தர்ப்பங்களில் பயிலுனர் விரிவுரையாளர்கள் உயர்கல்விக்காக தொடர்பு படுத்தும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. கல்விப் பிரிவைச் சேர்ந்த ஏனைய விரிவுரையாளர்களின் இணக்கத்தின் மீது அவ்வாறான விடுமுறைகள் வழங்குதல் மேற்கொள்ளப் படுகின்றது. | மனித வளம் உச்ச மட்ட செயற்திறனு டன் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கூட்டிணைந்த திட்டத்தின் படி 2018 ஆண்டளவில் 22 புதிய தொலைகல்விப் பாடநெறிகள் மற்றும் நிகழ்வுநிலை பாடநெறி 01 ஆரம்பிப்பதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் ஒரு பாடநெறி ஏனும் இந்தக் காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பொதுவாக கூட்டிணைந்த திட்டத்தில் அடங்கியுள்ள அனைத்து விடயங்களும் நூற்றிற்கு நூறு பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்த போதிலும் அது நடைமுறைச் சாத்தியமாக இருக்கவில்லை. நிறுவகத்தின் உள்ளகச் சுற்றாடலில் ஏற்படக் கூடிய பல்வேறு எதிர்மறை தாக்கங்களின் காரணமாக கூட்டிணைந்த திட்டத்தில் எதிர்பார்த்த விளைவுகள் அதே முறையில் பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் போகும். | நடைமுறை சாத்தியமாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதன்படி இலக்குகள் தீர்மானிக்கப்பட்டு அவற்றை பெற்றுக் கொள்வதற்காக முகாமைத்துவம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2012 – 2016 கூட்டிணைந்த திட்டத்தின் படி மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் மூலம் தொலை மற்றும் தொடர் கல்வி 06 வெளிவாரிப் பட்டப் பாடநெறிகள் ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஒரு பாடநெறியேனும் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. கூட்டிணைந்த திட்டங்களில் அடங்கியுள்ள செயற்பாடுகளை செயற்படுத்துவது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பொதுவாக கூட்டிணைந்த திட்டத்தில் அடங்கியுள்ள அனைத்து விடயங்களும் நூற்றிற்கு நூறு விடயம் பெற்றுக் கொள்ளல் எதிர்பார்த்த போதிலும் அது நடைமுறைச் சாத்தியமாக இருக்காது. அதன் படி தொலை மற்றும் தொடர் கல்வி அலகின் தூர நோக்கை செயற்படுவதற்காக அனைத்துச் செயற்பாடுகளும் எடுக்கப்படுவதுடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு நடைபெறும் வெளி சுற்றாடல் எதிர்மறை தாக்கங்கள் மீது மற்றும் அதே போல் நிறுவகத்தின் அகச் சுற்றாடலில் ஏற்படக் கூடிய பல்வேறு எதிர்மறை தாக்கங்கள் காரணமாக கூட்டிணைந்த திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த விளைவுகள் அதே விதமாக பெற்றுக் கொள்வதற்கு முடியாமல் போகின்றது. | தத்வரூபமாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதன்படி இலக்குகள் தீர்மானிக்கப்பட்டு அவற்றை பெற்றுக் கொள்வதற்காக முகாமைத்துவம் செயற்பட வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தற்கால உலகின் அநேகமான பல்கலைக்கழகங் களில் பட்டப் பாடநெறிகள் தொழில்நுட்பத்தை அடிப்படை யாகக் கொண்டு நிகழ்வு நிலை பாடநெறிகளாக (Online) நடாத்தும் போக்கொன்று காணப்பட்டது. றுஹுனு பல்கலைக்கழகத்திலும் பல்வேறு துறைகள் அணவல் செய்யும் விதமான வெளிவாரி பட்டப் பாடநெறிகள் நிகழ்வு நிலையில் நடாத்தப்படின் அந்தப் பட்டப் பாடநெறிகள் இலங்கை பூராகவும் மாத்திரமன்றி வெளிநாடுகளுக்கு திறப்பதற்குஇயலுமாக இருக்கும். இவ்வாறு பட்டப் பாடநெறிகள் ஆரம்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் | எதிர்காலத்தில் அலகின் மூலம் மேற்கொள்ளும் பாடநெறிகள் நிகழ்வு நிலை மற்றும் மாணவர்களை அழைத்து நடாத்தப்படும் ஆகிய இரு விதமான கலப்பு முறை (Hybrid) நடாத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. | தற்கால உலகில் அநேகமான பாடநெறிகள் நிகழ்வு நிலையில் நடாத்தப் படுவதுடன் அதனூடாக உள்நாட்டு மற்றும் வெளி உலகத்திற்கு திறக்கக் கூடியதாக உள்ளது. மேலும் அந்த முறைமையில் காணப்படும் நலன்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அதனால் தற்கால உலகில் காணப்படும் போக்கின் மீதும் கவனம் செலுத்தப்பட |

செலுத்தப்படாமையால் பல்கலைக்கழகத்திற்கு போலவே சமூகத்திற்கும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த நலன்களை பெற்றுக்கொள்வதற்கு முடியாமல் இருந்தது.

வேண்டும்.